நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

2018 யூன் 6 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 03ஆம் இலக்கம்

## மூலதன போதுமை தேவைப்பாடுகள்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபையானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கான குறைந்தபட்ச மூலதன போதுமை விகிதத்தினை கீழே தரப்பட்டவாறு தீர்மானித்திருக்கிறது.

1. குறைந்தபட்ச மூலதன போதுமைத் தேவைப்பாடுகள்

1.1 2018 யூலை 01ஆம் நாள் தொடக்கம் ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் எல்லா நேரங்களிலும் கீழே அட்டவணை 1 மற்றும் 2 இல் விபரிக்கப்பட்டவாறு மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

அட்டவணை 1 - ரூ.100 பில்லியனுக்கு குறைவான சொத்துக்களைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 6.50 | 7.00 | 8.50 |
| மொத்த மூலதனம் | 10.00 | 10.50 | 11.00 | 12.50 |

அட்டவணை 2 - ரூ.100 பில்லியனை மற்றும் அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 7.00 | 8.00 | 10.00 |
| மொத்த மூலதனம் | 10.00 | 11.00 | 12.00 | 14.00 |

1.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூலதன போதுமை விகிதங்கள் இங்கேயுள்ள பின்னிணைப்பு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான மூலதன போதுமை தேவைப்பாடுகள் மீதான கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ள முறையியல்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்.

2. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்

2.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் மூலதன போதுமை தேவைப்பாடுகளின் கணிப்புத் தொடர்பான விபரங்களை வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட முறைமையினூடாக, பின்வரும் விதத்தில் பின்னிணைப்பு அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) மாதாந்தம்: ஒவ்வொரு மாதத்தினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடுவதுடன் அதனை 15 நாட்களுக்குள் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ii) வருடாந்தம் (கணக்காய்வு) நிதியியல் ஆண்டின் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடுவதுடன் ஒவ்வொரு நிதியியல் ஆண்டும் முடிவடைந்ததன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் அதனை சமர்ப்பித்தலும் வேண்டும்.

3. இணங்குவிப்பு நிகழாத சந்தர்ப்பத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள்

3.1 மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுக்கு உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்கள் இணங்கி நடக்காத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று தொடர்பில் அல்லது பலவற்றின் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(i) பங்கிலாபங்களின் பகிர்ந்தளிப்பு மீது அல்லது இலாபங்களை இலங்கைக்கு வெளியில் அனுப்பும் நடவடிக்கைகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்தல்

(ii) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நியமங்களை மேலும் மேசமடையச்செய்யும் ஏதேனும் வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்தல்

3.2 அத்தகைய இணங்கிச்செல்லாமைகள் சீர்செய்யப்படுமிடத்து மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை பணிப்பாளர் நீக்கிவிடுதல் வேண்டும்.

4. விளக்கங்கள்

4.1 இப்பணிப்புரைகளில்

(i) பிரிவு 1.1 இன் அட்டவணை 1 மற்றும் 2 தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் சொத்துக்களினது பெறுமதி, கிடைக்கத்தக்கதாயிருக்கும் பிந்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ii) "பணிப்பாளர்" என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

5. முன்னைய பணிப்புரையினை இரத்துச்செய்தல்

5.1 2006ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை மற்றும் 2007.03.15ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை என்பன இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**அடிக்குறிப்பு:** இப்பணிப்புரையின் பின்னிணைப்பு அட்டவணை I மற்றும் II என்பன https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Finance_Business_Act_Directions_No_3_of_2018_e.pdf இல் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.